**சுருக்கம்**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புதுப்பித்தல் திட்டம் – உள்ளகரம்–புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு ரூ.28.08 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத்திட்டம் – நிர்வாக அனுமதி வழங்குதல் –ஆணை –வெளியிடப்படுகிறது

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2) துறை

அரசாணை எண்.70 நாள்: 7.5.2008

படிக்க

நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.117964/2007/UGSS3/, நாள் 27.2.2008.

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் ஒரு கருத்துருவினை அனுப்பியுள்ளார். அதில் உள்ளகரம்–புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சி சென்னை மாநகராட்சியை ஒட்டியுள்ளதால் நாளுக்கு நாள் குடியிருப்புகள் மற்றும் மனை பிரிவுகள் பெருகிவரும் நகரம் எனவும், இந்நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 8.50 ச.கி.மீ எனவும், 2001 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 30,422 எனத் தெரிவித்துள்ளார். எனவே, இந்நகராட்சியின் துப்புரவு மற்றும் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தி தமிழ்நாடு நகர்ப்புர கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தால் ஒரு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பின்னர் அது சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் உள்ளகரம்–புழுதிவாக்கம் நகராட்சிக்கு ரூ.29.95 கோடி மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம் கீழ்க்கண்ட உட்கூறுகளைக் கொண்டதாகத் திருத்தி அமைக்கப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்,

| | |
|---|---|
| 1. சேகரிப்பு நிலையம் | (3 மண்டலங்கள்) |
| 2.உந்து நிலையம் | (ஒவ்வொரு மண்டலத்திற்கும்) |
| 3. உந்துக் குழாய் இணைப்பு | (மண்டலம் ஒன்றிலிருந்து மூன்றிற்கு) |
| | (மண்டலம் இரண்டிலிருந்து மூன்றிற்கு) மற்றும் |
| | (மண்டலம் மூன்று சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் பெருங்குடி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு) |

2.மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் உள்ளகரம்–புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்த அரசுக்குப் பரிந்துரை செய்யும் மாநில அளவிலான திட்ட வழிப்படுத்துதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அறிவுறுத்தல் குழுவினால் 14.6.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு முகவரமைப்பான தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மதிப்பீட்டுத் தொகை ரூ.2808.05 இலட்சத்திற்கு அனுமதி அளித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு மத்திய அரசின் திட்ட ஒப்புதல் மற்றும் அறிவுறுத்தல் குழுவினால் 28.12.2007 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3.எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் உள்ளகரம்–புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சிக்கு ரூ.28.08 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டள்ளார்.

4. மேலே பத்தி 3ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாகப் பரிசீலித்து உள்ளகரம்–புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதியில் ரூ.28.08 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை–35.
நிர்வாக இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம், சென்னை–2
ஆணையர், உள்ளகரம்–புழுதிவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சி, சென்னை
மாநில தலைமைக் கணக்கர், சென்னை–18.
மாநில கணக்காயர், (தணிக்கை), சென்னை–18
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை–9
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை–108.

நகல்:
நிதித்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வ/செ) துறை, சென்னை–9.

–/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/–

(ஓம்) கே. தங்கராஜ்
அரசு சார்பு செயலாளர்